**தலைப்பு 176 - துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு**

-----------------------------------------------------------------------------------

1. **நிதி கூற்றுக்கள்**

-------------------------

1.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---------------------------------------------

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலை பற்றிய் கூற்று, அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய நிதி செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன அடங்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் என்பன அடங்கிய முழுமையான அறிக்கை 2019 மே மாதம் 31 ஆம் திகதியன்று பிரதான கணக்கீட்டு அலுவலரிடம் பெற்றுக்கொடுக்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த முழு விபரம் அடங்கிய முகாமைத்துவ கணக்காய்வு 2019 மே மாதம் 31 ஆம் திகதியன்று பிரதான கணக்கீட்டு அலுவலரிடம் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கையானது பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான தன்மை ஒன்றினை பிரதிபலிக்கச் செய்கின்றது என்பதே நான் கொண்டுள்ள அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-------------------------------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக் கொண்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதாகவும் உள்ளன என்பதே எனது நம்பிக்கையாகும்.

1.3 **நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு அலுவலரின் மற்றும் கணக்கீட்டு அலுவலரின் பொறுப்புக்கள்**

----------------------------------------------------------------------------------------------------------

போதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கதேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலை ஒன்றினை பிரதிபலிக்கச் செய்கின்றவாறு நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக இடம்பெறக் கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவாறு நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் பிரதம கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றினை முறையாக பேணிவருதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) துணைப் பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதி நிருவாகத்திற்காக பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினை தயாரித்து பேணி வருவதாக பிரதம கணக்கீட்டு அலுவலர் உறுதிப்படுத்தல் வேண்டும். மேலும் அந்த பயனுள்ள தன்மை பற்றி காலத்திற்குக் காலம் மீளாய்வு ஒன்றினை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையினை பயனுள்ள முறையில் நடாத்திச் செல்வதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

பொதவாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவாஎன்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார்ா துல்லியமான முறையில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. என்னால்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை ஏற்படுத்தக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கம் பொருட்டு அமைச்சின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான பயனுள்ள செயற்திறன் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது, நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் என்பவற்றிற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமானவாறும் நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வு வெளிப்படுத்தல்கள், பிரதான உள்ளக நிருவாக குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு விளக்கப்பட்டது.

## 1.5 பிற சட்டத் தேவைகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சினால் கடந்த வருடங்களுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான தேவையொன்று காணப்படாமையால் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுகளுடன ஒத்திசைகின்றது என்பதனை குறிப்பிட முடியாது. அதன் காரணமாக நிதிக் கூற்றுக்கள் பற்றிய பரிந்துரைகளும் இந்த அறிக்கையின் ஊடாக முன்வைக்கப்படவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) நிதி நிலை கூற்று

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | அமைச்சினால் மூலதன சொத்துகளை கொள்வனவு செய்தலின் கீழ் 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் வேலைகள் பூர்த்தி செய்து இருக்காத 02 கருத்திட்டங்களுடன் தொடர்புடைய ரூ.62,061,465 பெறுமதியான இடம்பெற்று வரும் வேலைகள் என குறிப்பிட்ட நிதிசாராத சொத்துகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | **2018** நவம்பர் **21** ஆம் திகதிய இலக்கம்: **267/2018** உடைய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் கணக்கீட்டு கோட்பாடுகளின் பிரகாரம் சரியான தகவல்களை நிதிக் கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சரியான முறையில் கணக்குகளை தயாரிப்பதற்கு 2019 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டதுடன் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும் அது பற்றி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | நிதி சாராத சொத்துகளின் ஆரம்ப மீதி ரூ. 232,863,367 ஆக காணப்பட்ட போதிலும் அம்மீதி நிதி அல்லாத | சரியான பெறுமதியினை கணக்குகளில் உள்ளடக்குவதற்கு | அதே |

| | | |
|---|---|---|
| | சொத்துகள் பற்றிய கூற்றில் ரூ. 266,621,052 ஆக ரூ. 33,757,685 தொகையால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. இவ்வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதி நிலை கூற்றின் பிரகாரம் வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதியானது முறையே ரூ. 248,915,208 மற்றும் ரூ. 21,270,663 ஆக அட்டவணையின் பிரகாரம் ரூ. 267,319,644 மற்றும் ரூ. 17,193,634 ஆக அமைந்ததனால் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அட்டவணைகள் என்பவ்றுக்கிடையே ரூ. 22,481,465 பெறுமதியான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | நிதிக் கூற்றுக்களில் அதே குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளை முழு விபரத்துடனான அட்டவணையுடன் பொருந்தும் வகையில் தயாரித்தல் வேண்டும் |

**(ஆ) நிதி செயலாற்றுகை கூற்று**

**-------------------------------**

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு அலுவலரின் பரிந்துரை** |
|---|---|---|---|
| | ----------------------------------------------------- | ---------------------------------- | ------------------------------------------- |
| (i) | ஆண்டு காலப் பகுதியினுள் அரச உத்தியோகத்தர்களின் முற்பணப் பெறுகைகள் ரூ. **6,027,886** குறைவாகவும், பிற பெறுகைகள் ரூ. **4,205,860** அதிகமாகவும் குறிப்பிடுதல் காரணமாக நிதி செயலாற்றுகை கூற்றின் வருமானம் அல்லாத பெறுகைகள் ரூ. **1,822,026** குறைவாக காட்டப்பட்டிருந்தது. | **2018** நவம்பர் மாதம் **21** திகதிய இலக்கம்: **267/2018** உடைய அரச கணக்குகள் சுற்றிக்கையின் 03 வது பந்தியின் பிரகாரம் சரியாக கணக்குகளை தயாரித்தல் வேண்டும் . | **2018** நவம்பர் மாதம் **21** திகதிய இலக்கம்: **267/2018** உடைய அரச கணக்குகள் சுற்றிக்கையின் பிரகாரம் கணக்குகளை தயாரிப்பதற்கு 2019 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டதுடன் அது பற்றி உரிய அலுவலர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளேன். |
| (ii) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவுகள் ரூ. **8,177,719** ஆக காணப்படுகின்ற போதிலும் நிதி செயலாற்றுகை கூற்றில் ரூ. **5,511,133** எனக் குறிப்பிடுதல் காரணமாக முற்பணக் கொடுப்பனவுகள் ரூ. **2,666,586** ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | -அதே- | - அதே- |

| | | | |
|---|---|---|---|
| (iii) | முற்பண சீராக்க கணக்குகுள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் அனுமதிப் பத்திரம் மற்றும் பிற வருமானங்களின் கீழ் கூட்டப்பட்டு பொதுத் திறைசேரிக்கு மாற்றப்பட்டிருந்த ரூ.101,036,857 தொகை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. சாட்சிகள் மூலம் உறுதிப்படுத்தப்படாத ரூ. 5,369,898 தொகையானது பிற திணைக்களங்களினால் திரட்டப்பட்ட வருமானமாக சீராக்கக் கணக்கில் குறிப்படப்பட்டிருந்தது. | - அதே - | - அதே- |
| (iv) | மாதாந்த கணக்கு சாரம்சங்களின் பிரகாரம் அமைச்சினால் ஏனைய திணைக்களங்கள் / அமைச்சு என்பவற்றுக்காக மேற்கொண்டிருந்த செலவினமான தொகை ரூ. 2,344,210 ஆன போதிலும் சீராக்க கணக்கில் அத்தொகையானது ரூ.738,065 என ரூ.1,606,145 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | - அதே - | - அதே- |
| (v) | திறைசேரி புத்தகங்கள் மற்றும் அமைச்சு புத்தகங்கள் என்பவற்றுக்கிடையே முற்பண பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளில் நிலவிய முறையே ரூ.701,868 மற்றும் ரூ.11,500 என்பவற்றின் வித்தியாசம் தொடர்பாக சீராக்கக் கணக்குளை தயாரிக்கும் போது கவனத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - அதே - | - அதே- |

1.6.2. **அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு பற்றிய இணக்கக்கூற்று**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துை** | **பிரதான கணக்கீட்டு அலுவலரின் பரிந்துரை** |
|---|---|---|---|
| (i) | அமைச்சில் இருந்து வெளி நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 06 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூ. 462,459 பெறுமதியான தொகை 15 வருட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் பணித் தடை செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற 02 பணியாளர்களிடமிருந்து முறையே | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தன் 1.6, 1.7 மற்றும் 6.3 பிரிவுகள் மற்றும் 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய இல. 118 உடைய தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் 1வது பந்தி மற்றும் 2015 ஒக்டோபர் | 06 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. **462,583** பெறுமதியான கடன் மீதியான 1990 தசாப்தம் வரையில் பழைமை வாய்ந்ததாகும் இக்கடன் மீதியை பதிவளிப்பதற்கு அரச நிதி திணைக்களத்திடம் |

| | | |
|---|---|---|
| அறவிடப்பட வேண்டியிருந்த ரூ. 293,470 மற்றும் ரூ. 21,140 அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாதம் 09 ஆம் திகதிய இலக்கம் பீஎப்டி/ஆர்ஈடி/2015/08பொது(i) உடைய அரச நிதி சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். | கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பணித் தடைக்கு உட்பட்டுள்ள பணியாளர் ஒருவருக்கு வழக்குத் தாக்கல் செய்ததன் பின்னர் வழங்கிய தீர்ப்பின் மீது அந்த அலுவலர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். அதற்கு கிடைக்கும் தீர்மானத்தின் மீது பணிக்கொடையிலிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். அறவிட வேண்டியுள்ள ரூ. **21,140** ஆன தொகை ஒரு தசாப்தத்தை விடவும் பழைமை வாய்ந்ததாக உள்ளமையினால் இக்கடன் தொகையினை அறவிட்டுக் கௌ்ளல் தொடர்பாக முன்னேற்றம் ஒன்றினை காட்டுவது கடினமானது என்பதனை குறிப்பிட விரும்புகின்றேன். |

### 1.6.3. பிரதான கணக்கீட்டு அலுவலரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 வது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பிரதான கணக்கீட்டு அலுவலரினால் பின்வருதம் விடயங்கள் தொடர்பான உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க்பபட்டிருக்கவில்லை.

| அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் நிதி நிருவாகத்திற்காக பயன்தகு உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினை தயாரித்து பேணி வருவதாக பிரதான கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலர் ஆகியோர் உறுதிப்படுத்தல் வேண்டும். அம்முறைமையின் பயன்தகு தன்மை பற்றி காலத்திற்கு காலம் மீளாய்வினை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையினை பயன்தரும் | தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 வது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். | அமைச்சின் நிதி நிருவாகத்திற்காக பயன்தகு உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்று பேணி வரப்படுகின்றது. இதன் எழுத்து மூல மீளாய்வு ஒன்றினை மேற்கொண்டு 2018 ஆம் ஆண்டில் 19 ஆம் |

| | | |
|---|---|---|
| வகையில் நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்களை செய்தல் வேண்டும் எனவும், அந்த மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதிகளை கணக்காளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | | இலக்க் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**1.6.4. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கு இணங்காமை**

மாதிரி கணக்காய்வு விசாரணையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் நடவடிக்கை முறைகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| **அவதானிப்பு** | | | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை** |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், ஒழுங்குவிதிகள் பற்றிய அவதானம்** | **பெறுமதி** | **இணக்கமின்மை** | | |
| | **ரூ.** | | | |
| 2014 ஆண்டின் பெப்ரவரி 17 ஆம் திகதிய இலக்கம். 1/2014 உடைய அரச நிதிச் சுற்றறிக்கை. | - | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த தொழிற்பாட்டு திட்டத்தில் உள்ளடக்க வேண்டியிருந்த வருடாந்த கட்டுநிதி தேவை பற்றிய திட்டம், இற்றைப்படுத்திய அமைச்சின் மற்றும் கப்பல்துறை செயலகத்தின் ஒழுங்குக் கட்டமைப்பு மற்றும் பதவியணி பற்றிய அறிக்கையும் திட்டமும் என்பன உள்ளடக்கப்பட்டிருக் கவில்லை. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள் ளவாறு செயலாற்றல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டு தொடர்பாக கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து திருத்திய தொழிற்பாட்டு திட்டம் ஒன்று தயாரிக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 முற்பண முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சு திட்டமிட்டவாறு பொதுத் திறைசேரியிலிருந்து முற்பணம் கிடைத்திருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டிலே 1,413 மில்லியன் ரூபா கோரியிருந்த போதிலும் வழங்கப்பட்ட முற்பணமானது 329 மில்லியன் ரூபாவாகும். அது 23 சதவீதமாகும். நிதி ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமை காரணமாக பாராளுமன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை சிறந்த முறையில் பயன்படுத்த முடியாது போயிருந்தது. | தொழிற்பாட்டு திட்டத்தின் பிரகாரம் உரிய அபிவிருத்தி கருத்திட்டங்களை அமுல்படுத்தக்கூடியவாறு முற்பணம் கோரும் போது திட்டம் ஒன்றினை தயாரித்து அதனை சமர்ப்பித்து அமுல்படுத்தல் வேண்டும். | முதல் 03 காலாண்டினுள் கோரியிருந்த முற்பணத் தொகையில் பணம் கிடைக்காத அளவானது இறுதி காலாண்டில் முற்பணம் கோரும் போது அதில் உள்ளடக்கப்பட்டது. அதனால் பாராளுமன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தாமல் இருப்பதற்குரிய காரணமாக அமைந்துள்ளது. |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **நி.பி. 66 இன் கீழ் மாற்றிக் கொண்ட நிதி ஏற்பாடுகளின் மீதி** | | |
| | - அமைச்சின் விடயப் பரப்பிற்கு உட்படாத சூரியவெவ சர்வதேச கிரிகெட் மைதானத்தின் நிர்மாணப் பணிகளுக்காக பெற்றுக் கொண்ட கடன் தொகையினை ஈடு செய்வதற்காக பிற மூலதனச் செலவின தலைப்புகளிலிருந்து நி.பி. 66 இன் கீழ் ரூ. 650,000,000 பெறுமதியான நிதி ஏற்பாடுகளை மாற்றிக் கொண்டிருந்த போதிலும் அவ்வாறு மாற்றிக் கொண்ட முழு நிதி ஏற்பாடும் மீதமாக இருந்தது. எவ்வாறாயினும் அக்கடன் | நி.பி. 50 இன் பிரகாரம் உரிய முறையில் செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். | தேவைக்கு ஏற்ப 176-2-4-26 2509 செலவினத் தலைப்புக்கு நி.பி. 66 இன் கீழ் நிதி ஏற்பாடுகளை மாற்றிக் கொண்ட போதிலும் செலவினத்தை மேற்கொள்வதற்காக பொதுத் திறைசேரியிலிருந்து முற்பணத்தை பெற்றுக் கொள்ள முடியாது போனமையால் நிதி ஏற்பாடுகள் மீதமாக உள்ளதுடன் அத்தொகையினை 2018 ஆம் ஆண்டிற்கான பொறுப்பு ஒன்றாக குறிப்பிடப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| தொகைக்கான வட்டி செலுத்துவதற்காக குறை நிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாடுகள் மீது ரூ. 278,835,112 பெறுமதியான தொகை 2018 நவம்பர் மாதம் 28 ஆம் திகதி அமைச்சினால் மக்கள் வங்கிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| **(ஆ) நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தாமை அல்லது குறைவாக பயன்படுத்தியமை**<br>**---------------------------------------------**<br>மூலதன செலவினத் தலைப்புகள் 10 இற்குரிய ரூ. 67,404,416 பெறுமதியான நிதி ஏற்பாடுகள் மீதமாக இருந்ததுடன் அது 25 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான இடைவெளியைக் கொண்டிருந்தது. மூலதன செலவினத் தலைப்புகள் 05 இற்காக ஒதுக்கிய ரூ. 2,270,000,000 பெறுமதியான முழு நிதி ஏற்பாடுகளும் மீதமாகியிருந்தது. மீண்டுவரும் செலவினத் தலைப்புகள் 06 இற்குரிய ரூ. 13,059,336 பெறுமதியான நிதி ஏற்பாடுகள் மீதமாக இருந்ததுடன் அது 29 சதவீதத்திற்கும் 60 சதவீதத்திற்கும் இடையிலான இடைவெளியை கொண்டிருந்தது. | நி.பி. 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைய மதிப்பீடுகளை தயாரித்து வருடாந்த செலவினங்களை மேற்கொள்ளல் வேண்டும். | அதிகமான செலவினத் தலைப்புகளில் உத்தேச செலவினம் ஏற்படாமை இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்களை கொள்வனவு செய்யும் போது ரூபாவின் பெறுமதி இறக்கம், கட்டளையிட்ட பொருட்கள் கிடைக்காமை மற்றும் வர்த்தக கப்பல் துறை செயலகத்தினால் எதிர்பார்த்தவாறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த முடியாமல் போனமை என்பன அந்த செலவினத் தலைப்புகளுக்குரிய நிதி ஏற்பாடுகள் மீதமாவதற்கு காரணமாக அமைந்துள்ளது. |

## 2.3. பொறுப்புக்கள் மற்றும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளல்

**-----------------------------------------------------------------------------------**

| **கணக்காய்வு அவதானிப்புகள்**<br>------------------------------------- | **பரிந்துரை**<br>------------------------ | **பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை**<br>**---------------------------------------------** |
|---|---|---|
| நிதி ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக ஒப்பந்தங்களை செய்து கொள்ளல்<br>---------------------------------------------<br>செலவினத் தலைப்புகள் 4 இற்குரிய ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை விடவும் மேலதிகமாக ரூ. 3,023,031 ஒப்பந்தங்கள் செய்து | நி.பி. 94 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கை முறைகளுக்கு அமைவாக மதிப்பீட்டு நிதி ஏற்பாடுகளின்றி ஒப்பந்தங்களை செய்து | கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த வவுச்சர்கள் பொறுப்பு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் New Cigas இணைய பக்கத்திற்கு பதிவேற்றல் (Upload) செய்ய |

| | | |
|---|---|---|
| கொள்ளப்பட்டிருந்தன. | கொள்ளக் கூடாது. | முடியாது போனமை, நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பொதுத் திறைசேரியிலிருந்து முற்பணம் கிடைக்காமை காரணமாக பொறுப்புகள் ஆவணத்தில் உள்ளடக்காமை, பதிவேற்றம் செய்யும் போது ஏற்பட்ட தடை காரணமாக 2018.12.31 ஆம் திகதியாகும் போது செலுத்தி முடித்துள்ள பொறுப்புக்களும் New Cigas இணையப் பக்கத்தில் காட்டுகின்ற பொறுப்புக்கள் கூற்றில் காணப்படுதல் உள்ளிட்ட காரணங்களின் மீது கணக்குகளை தீர்த்தன் பின்னர் அதனை சரிபடுத்த முடியாது போனது. இந்த ஆண்டு முதல் அவ்வாறான தவறுகள் இடம் பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

## 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|
| **பிரதான பெறுகைகள் பற்றிய திட்டமிடல்**<br>வருடாந்த மதிப்பீடுகள் மூலம் 65 மில்லியன் ரூபா பெறுமதியான நிதி ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 02 அபிவிருத்திப் பணிகள் மற்றும் மூலதனச் சொத்துகளை கொள்வனவு செய்தல், புனரமைப்பு மற்றும் மேம்பாடு உள்ளிட்ட பணிகளுடன் தொடர்புடைய பெறுகைத் திட்டங்கள் வருடாந்த தொழிற்பாட்டு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதி 2014/01 உடைய அரச நிதி சுற்றறிக்கையின் 3 வது பந்தியின் (உ) இன் பிரகாரம் திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிலும் இப்பணிகளில் ஒரு பகுதியை நிறைவேற்ற வேண்டியுள்ளதுடன் அது 2019 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட தொழிற்பாட்டு திட்டத்தில் உள்ளடக்கப்படும். |

## 3.2 பொறுப்புக்களை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|
| கப்பற்துறை செயலகத்தினால் 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க வணிகக் கப்பல்துறை சட்டம் மற்றும் அதன் திருத்த்தின் மீது அறவிடப்படுகின்ற இசைவுச் சான்றிதழ், தொடர்ச்சியாக விடுவிப்பதற்கான சான்றிதழ் மற்றும் இணைப் பிரதிகளை வழங்குவதற்கான கட்டணம் ஆகிய மூன்று கட்டண வகைகள் தவிர்ந்த மேலும் 10 தொகுதிகளுக்குரிய ஏனைய 50 கட்டண வகைகளுக்கும் மேலானவை 2006 ஆம் ஆண்டின் பின்னர் எதுவித திருத்தத்திற்கும் உட்பட்டிருக்கவில்லை. | 2018 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை அமுல்படுத்துவதுடன் தொடர்புடைய இலக்கம் 01/2018 மற்றும் 2018 சனவரி 17 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சேவை வழங்கலின் போது அறவிடுகின்ற கட்டணங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செயலாளரின் அனுமதியின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் கட்டண திருத்தங்கள் பற்றிய வரைவு ஒன்றினை தயாரிக்கும் பணி பூர்த்தியடைந்துள்ளது. 2019 ஆம் ஆண்டிலே இப்பணியை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

## 3.3 உத்தேச நன்மைகள் (Outcome) பெறப்படாதிருத்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|
| யாழ்ப்பாண தீபகற்பத்தின் தீவுகளுக்கிடையில் பயணிகள் மற்றும் பொருட்களை கொண்டு செல்லும் வள்ளங்களை பதிவு செய்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் பழுது பார்த்தல் என்பவற்றிற்கு வசதியளிப்பதன் ஊடாக கரையோர பயணிகள் போக்குவரத்து சேவையினை முறைப்படுத்தும் நோக்கம் உட்பட 2016 ஆம் ஆண்டிலே கப்பல்துறை செயலகத்தின் யாழ்ப்பாண மாவட்ட துணை அலுவலகம் மற்றும் சறுக்குப் பாதை (Slipway) நிர்மாணித்தல் உள்ளிட்ட கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. குறித்த நிர்மாணப் பணிகள் 2017 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது அடிப்படை நிர்மாணப் பணிகள் மாத்திரம் பூர்த்தியடைந்திருந்ததுடன் 2019 ஏப்ரல் 09 ஆம் திகதியாகும் போது நீர் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திப் பணிகள் | வருடாந்த மதிப்பீடு மற்றும் தொழிற்பாட்டு திட்டத்திற்கு ஏற்ப செயற்பட்டு உத்தேச காலப் பகுதியினுள் நிதி ஏற்பாடுகளைப உபயோகித்து பயன் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிலே உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக் கொண்டு பொதுப் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

பூர்த்தியடையாமை காரணமாக பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது.

## 3.4 வெளிநாட்டு உதவி கருத்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|
| காங்கேசந்துறை துறைமுக அபிவிருத்தி பணி மற்றும் அது பற்றிய பணிகளை வழி நடாத்துவதற்காக நிருவாகக் கட்டிடம் ஒன்று மற்றும் களஞ்சியசாலை ஒன்றினை நிர்மாணிப்பதற்காக இந்திய எக்ஸிம் வங்கியின் கடன் (Line of Credit) இன் கீழ் 2018 ஆம் ஆண்டிற்காக 1,350 மில்லியன் ரூபா நிதி ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினும் பெறுகைப் பணிகள் மற்றும் நிர்மாணங்கள் என்பவற்றில் 05 சதவீதத்தை நிறைவு செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் அவ்வாறு திட்டமிட்ட பணிகள் ஆரம்ப மட்டத்திலே காணப்பட்டதுடன் முழு நிதி ஏற்பாடும் மீதமாக இருந்தது. இதன் காரணமாக அரச கடனானது சிறந்த முறையில் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | அரச கடனை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்காக வினைத்திறனான முறையில் செயற்படுவது அமைச்சின் பொறுப்பாகும். | நிதி ஏற்பாடுகள் அமைச்சிலிருந்து கோரப்பட்டிருக்கவில்லை. திறைசேரியினால் 1,350 மில்லியன் ரூபா பெறுமதியான தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. ஆரம்பக் கட்டப்பணிகளாக காணி உரிமை மாற்றல், கருத்திட்ட ஆலோசகர் ஒருவரை நியமித்தல் மற்றும் கடற்படையின் கட்டிடங்களை மீளமைத்தல் உள்ளிட்ட விடயங்களில் காணப்பட்ட சிக்கல்கள் காரணமாக துறைமுக மறுசீரமைப்பு பணிகளை ஆரம்பிக்கும் பணியில் தாமதம் ஏற்பட்டது. |

## 3.5 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் அச்சீட்டு பணிகளுக்காக விலை மனுக்களை கோரும் போது அரசாங்கப் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் அழைக்க வேண்டிய ஆகக் குறைந்த முத்திரை இடப்பட்ட விலை மனுவின் பெறுமதி அழைக்கப்படாதிருத்தல், முத்திரை இடப்பட்ட விலை கோரலுக்கு பதிலாக தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் (E-mail) அல்லது நேரில் வந்து ஒப்படைக்குமாறு விலைமனுதாரர்களுக்கு அறிவிக்கபட்டிருத்தல் தெளிவான நியமன் குறிப்பீடுகள் சமர்ப்பிக்கப்படாதிருத்தல். விலைமனுக்களை திறப்பதற்கு உரிய தினம் மற்றும் நேரம் குறிப்பிடப்படாதிருத்தல் மற்றும் அனுமதிக்கப்பட்ட ஆவணங்களை பயன்படுத்தாது இருத்தல் உள்ளிட்ட குறைபாடுகளை அவதனாக்கக்கூடியதாக | அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்டுளள வழிகாட்டல்களுக்கு ஏற்ப செயற்படுதல் வேண்டும். | அமைச்சினால் விலை மனுக்களை கோரும் போது அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

உள்ளது.

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வு ஆண்டு முடிவடையும் போது பொறியியல் பிரிவுகளுக்கு சொந்தமான கப்பல்துறை தொழில் சார்ந்தவர்களின் 11 வெற்றிடங்கள் உட்பட சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த 18 வெற்றிடங்களும், 3ஆம் நிலை பதவிகள் 18 மற்றும் 2ஆம் நிலை பதவிகள் 46 என்பன வெற்றிடமாக இருந்த போதிலும் ஆட்சேர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் பணிகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு போதிய பதவியணி ஒன்றினை பேணி வருதல் வேண்டும். | சம்பளம் போதியதாக இல்லாமையினால் ஆட்சேர்ப்ப செய்வதில் கடினத் தன்மையொன்று நிலவியதுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொது நிருவாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |